[22nd November 1963

* *429* **கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் செங்கற்பட்டில் தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) எழாது.

(*a*) No.

(*b*) Does not arise.

நகரசபை பொருட்காட்சி (சேலம்).

* 430 **கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம்** : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி முதல் சேலம் நகரத்தில் மாரியம்மன் பண்டிகையை முன்னிட்டு பொருட்காட்சி நடத்த அந்நகராட்சிக்கு அனுமதி வழங்காததற்குக் காரணமென்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சேலம் நகராட்சி மன்றத்திற்கு 1963-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி முதல் பொருட்காட்சி நடத்த அனுமதி மறுக்கப்படவில்லை.

சுங்கவரி வசூல்

* 431 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி** : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் ராமநாதபுரம் ஜில்லா திருப்புவனம் வைகை ஆற்றில் கட்டப்பட்ட பாலத்திலிருந்து டோல்கேட் வரி வசூல் செய்வது சம்பந்தமாகவும் டோல்கேட் வரி வசூல் செய்யும் திட்டத்தையே நமது மாகாணம் பூராவும் ரத்து செய்யும்படியும் திருப்புவனம் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடமிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், நான் கேட்ட கேள்விக்கு இல்லை என்று பதில் சொன்னார்கள். அரசாங்கத்திடம் இருந்து எனக்குப் பதில் வந்திருக்கிறது. மதுரைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள

22nd November 1963]

பாலத்திற்கு 'டோல் கேட்டு' அமைத்து வரி வசூல் செய்ததை நிறுத்தி விடவேண்டுமென்று மதுரை நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி உள்ளது. அதற்கு இணங்க அந்த வரி வசூல் செய்வது நிறுத்தப்பட்டது. அது போலவே திருபுவனத்திற்கு அருகில் உள்ள பாலத்திற்கும், நம் மாநிலத்தில் உள்ள மற்ற இதர பாலங்களுக்கும் 'டோல் கேட்டு' அமைத்து வரி வசூலிப்பதை அரசாங்கம் நிறுத்த உத்தரவு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : மூலக் கேள்வி திருபுவனம் பாலத்தைப் பொறுத்தது. அதைப்பற்றி விவரம் கேட்டு இருக்கிறார்கள். அதைப்போல் ஒரு கோரிக்கை வரவில்லை என்று நான் சொன்னேன். தெரிந்துதான் பதில் சொல்லி இருக்கிறேன். மேலும் ஏதாவது விவரம் வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் அது பரிசிலனை செய்யப்படும்.

வெள்ளைக் களிமண் (செங்கம் தாலுக்கா)

* 432 கேள்வி.—திரு. ஆர். ஜீவரத்தினம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா செங்கம் தாலுகா தென்முடியனூர் கிராமத்தில் வெள்ளைக் களிமண் கிடைப்பதாகச் சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா ?

(இ) அப்படியானால் அந்தத் தகவல் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

Arts Colleges

* 433 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of Arts Colleges permitted to be opened during the current year under private management; and

(*b*) the total number of seats for P.U.C. available in all the colleges at the beginning of the educational year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The University has granted affiliation to four new colleges opened under private management with Pre-University Course.

(*b*) 27,813.

(அ) தனியார் நிர்வாகத்தின்கீழ் பி.யு.சி. வருப்புடன் திறக்கப்பட்ட நான்கு புதிய கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகம் அனுமதியளித்துள்ளது.

(இ) 27,813.